# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT,
CHENGLAPATTU

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| Sessions | : | SC.No.203/2021 |
| Deposition of Witness for | : | PW.8 |
| Name | : | திரு.சிவபிரகாஷ் |
| Father's Name | : | திரு.பூபதி |
| Taluk/Address | : | பெரியார் நகர், திருக்கச்சூர் |
| Age | : | 46 |
| Date | : | 24.02.2026. |

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ரவிபிரகாஷ் எனது அண்ணன். அ.சா.1 செந்தில்பிரகாஷ் என்னுடன் பிறந்த தம்பி. கடந்த 06.01.2012ம் தேதி நான் தென்னக ரயில்வே எழும்பூரில் பணியிலிருந்தேன். அன்று மாலை 2.00 மணியளவில் என்னுடைய அம்மா தொலைபேசி மூலம் என்னுடைய அண்ணன் ரவிபிரகாஷை யாரோ கொலை செய்து விட்டார்கள் என்று தகவல் சொன்னார். நான் உடனே அலுவலகத்தில் இருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு வந்து பார்த்தேன். அங்கு என் அண்ணன் ரத்த வெள்ளத்துடன் இறந்து பிணமாக இருந்தவரை பார்த்தேன். அன்றைய தினமே என்னை செங்கல்பட்டு நகர போலீசார் விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது.

**(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி இந்த நீதிமன்றத்தில் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

அப்பொழுது நான் ஓட்டல் மேனேஜ்மெண்ட் படித்து விட்டு ரயில்வேயில் எலக்டிக்கல் பிரிவில் ஊழியராக வேலை செய்து வந்தேன் என்றும், என் அண்ணன் ரவிபிரகாஷ் என்பவர் செங்கல்பட்டு நகரமன்ற துணை தலைவராக இருந்து வந்தார் என்றும், அவர் சிறு வயதில் இருந்தே வீட்டிற்கு அடங்காமல் பல பேர்களுடன் சேர்ந்து செங்கல்பட்டு ஏரியாவில்

ரவுடி தனத்தில் ஈடுபட்டு வந்தார் என்றும், அவ்வபோது போலீசார் வழக்கு போட்டு ஜெயிலுக்கு அனுப்பி வைப்பார்கள் என்றும், என்னுடைய அம்மா தகவல் தெரிந்து போய் ஜாமீனில் அழைத்து வருவார் என்றும், வெளியில் வந்தவுடன் மீண்டும் ரவுடி தனத்தில் ஈடுபடுவார் என்றும், 2007ம் வருடம் குரங்கு குமார் மற்றும் ஆவிராஜா கொலை வழக்குகளுக்கு பிறகு ஜெயிலுக்கு போய் வந்ததில் இருந்து படிப்படியாக ரவுடிதனத்தை குறைத்து கொண்டிருந்தார் என்றும், 2009ம் வருடம் பாண்டிச்சேரியை சேர்ந்த மகேஸ்வரி என்ற பெண்ணை மேல்மலையனூர் கோவிலில் வைத்து திருமணம் செய்துக்கொண்டு 1 1/2 வயதில் பிரதிபா என்ற பெண் குழந்தையுடன் வாழ்ந்து வந்தார் என்றும், என்னுடைய அண்ணி அப்பொழுது 6 மாத கர்ப்பமாக இருந்தார் என்றும், திருமணம் ஆன பின்பு ரவுடி தனங்களில் ஈடுபடாமல் திருந்தி வாழ்ந்து வந்தார் என்றும், செங்கல்பட்டு ஏரியாவில் என் அண்ணன் ரவிபிரகாஷை போல பட்ரவாக்கம் சிவா என்பவரும் ஆட்களை கூட வைத்து கொண்டு ரவுடி தனங்களில் ஈடுபட்டு வந்தார் என்றும், சிவாவிற்கும், என் அண்ணன் ரவிபிரகாஷிற்கும் பிடிக்காது என்றும், இந்நிலையில் கடந்த 2010ல் நடந்த உள்ளாட்சி தேர்தலில் என் அண்ணன் திமுக கட்சி சார்பாக போட்டியிட்டு செங்கல்பட்டு நகராட்சி துணை தலைவராகி அரசியலிலும் பெரிய ஆளானது பட்ரவாக்கம் சிவாவிற்கு பிடிக்கவில்லை என்றும், அவ்வபோது சிவா மீது தன்னிடம் வரும் புகார் சம்பந்தமாக அவரை தட்டிக்கேட்டு வந்துள்ளார் என்றும், 06.01.2012ம் தேதி நான் வீட்டிலிருந்த போது என் அண்ணன் ரவிபிரகாஷ் தான் செங்கல்பட்டு நகரத்தில் புதிதாக கட்டிவரும் வீட்டை பார்க்க என் தம்பி செந்தில்பிரகாஷுடன் போனார் என்றும், அன்று மதியம் 3.00 மணிக்கு என் அண்ணனுடன் எப்பொழுதாவது எங்கள் வீட்டிற்கு வரும் வரதன் என்பவர் என் அம்மாவிற்கு போன் செய்து தான் குடியிருந்து வரும் செங்கல்பட்டு ரைட்டர் சபாபதி தெருவிலுள்ள வீட்டில் தான், பாலா, அஜீத், பழனி, செந்தில்பிரகாஷ், ரவிபிரகாஷ் ஆகியோர் வழக்கு சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்த பட்ரவாக்கம் சிவா மற்றும் அவருடன் வந்த 10க்கும் மேற்பட்டவர்கள் ரவிபிரகாஷை கத்தியால் வெட்டி கொலை செய்து விட்டு கருப்பு நிற பொலிரோ காரில் தப்பி சென்றுவிட்டதாகவும், உடனே புறப்பட்டு வரும்படி எனக்கு தகவல் கூறினார் என்றும், உடனே என் அம்மாவும் செங்கல்பட்டு ரைட்டர் சபாபதி தெருவிலுள்ள வரதன் வீட்டிற்கு போனபோது என் அண்ணன் ரவிபிரகாஷின்

பிரேதத்தை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய்விட்டதாக கூறினார்கள் என்றும், செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு நான் சென்று பார்த்தபோது என் அண்ணன் ரவிபிரகாஷ் தலையில் பலத்த வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்தார் என்றும், பட்ரவாக்கம் சிவாவும், அவனுடன் வந்தவர்களும் தான் என் அண்ணன் ரவிபிரகாஷை முன்விரோத்தில் வெட்டி கொலை செய்துள்ளனர் என்றும், இது சம்பந்தமாக என் தம்பி செந்தில்பிரகாஷ் புகார் கொடுத்தார் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGLAPATTU

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| Sessions | : | SC.No.203/2021 |
| Deposition of Witness for | : | PW.9 |
| Name | : | திருமதி.மகேஸ்வரி (எ) அகிலா |
| Husband's Name | : | திரு.ரவிபிரகாஷ் |
| Taluk/Address | : | நம்பர் எண்.2, பெரியார் நகர், திருக்கச்சூர் |
| Age | : | 36 |
| Date | : | 24.02.2026. |

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ரவிபிரகாஷ் என்னுடைய கணவர். அ.சா.1 மற்றும் அ.சா.8 என் கணவரின் தம்பிகள். கடந்த 06.01.2012 அன்று என் கணவரை வெட்டி கொன்று விட்டார்கள் என்று என் மாமியார் எனக்கு தகவல் சொன்னார். அந்த சமயத்தில் நான் கர்ப்பமாக இருந்ததால் நான் போய் என் கணவரை பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி இந்த நீதிமன்றத்தில் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

அப்பொழுது இறந்துபோன ரவிபிரகாஷ் என்பவர் என் கணவர் என்றும், அவர் செங்கல்பட்டு நகரமன்ற துணை தலைவராக இருந்து வந்தார் என்றும், அவர் சிறு வயதில் இருந்தே வீட்டிற்கு அடங்காமல் பல பேர்களுடன் சேர்ந்து செங்கல்பட்டு ஏரியாவில் ரவுடி தனத்தில் ஈடுபட்டு வந்தார் என்றும், அவ்வபோது போலீசார் வழக்கு போட்டு ஜெயிலுக்கு அனுப்பி வைப்பார்கள் என்றும், என்னுடைய மாமியார் தகவல் தெரிந்து போய் ஜாமீனில் அழைத்து வருவார் என்றும், வெளியில் வந்தவுடன் மீண்டும் ரவுடி தனத்தில் ஈடுபடுவார் என்றும், 2007ம் வருடம் குரங்கு குமார் மற்றும் ஆவிராஜா கொலை வழக்குகளுக்கு பிறகு

ஜெயிலுக்கு போய் வந்ததில் இருந்து படிப்படியாக ரவுடிதனத்தை குறைத்து கொண்டிருந்தார் என்றும், 2009ம் வருடம் என்னை மேல்மலையனூர் கோவிலில் வைத்து திருமணம் செய்துக்கொண்டு 1 1/2 வயதில் பிரதிபா என்ற பெண் குழந்தையுடன் வாழ்ந்து வந்தார் என்றும், நான் அப்பெபாழுது 6 மாத கர்ப்பமாக இருந்தேன் என்றும், திருமணம் ஆன பின்பு ரவுடி தனங்களில் ஈடுபடாமல் திருந்தி வாழ்ந்து வந்தார் என்றும், செங்கல்பட்டு ஏரியாவில் என் கணவர் ரவிபிரகாஷை போல பட்ரவாக்கம் சிவா என்பவரும் ஆட்களை கூட வைத்து கொண்டு ரவுடி தனங்களில் ஈடுபட்டு வந்தார் என்றும், சிவாவிற்கும், என் கணவர் ரவிபிரகாஷிற்கும் பிடிக்காது என்றும், இந்நிலையில் கடந்த 2010ல் நடந்த உள்ளாட்சி தேர்தலில் என் கணவர் திமுக கட்சி சார்பாக போட்டியிட்டு செங்கல்பட்டு நகராட்சி துணை தலைவராகி அரசியலிலும் பெரிய ஆளானது பட்ரவாக்கம் சிவாவிற்கு பிடிக்கவில்லை என்றும், அவ்வபோது சிவா மீது தன்னிடம் வரும் புகார் சம்பந்தமாக அவரை தட்டிக்கேட்டு வந்துள்ளார் என்றும், 06.01.2012ம் தேதி நான் வீட்டிலிருந்த போது என் கணவர் ரவிபிரகாஷ் தான் செங்கல்பட்டு நகரத்தில் புதிதாக கட்டிவரும் வீட்டை பார்க்க அவரது தம்பி செந்தில்பிரகாஷுடன் போனார் என்றும், அன்று மதியம் 3.00 மணிக்கு என் கணவருடன் எப்பொழுதாவது எங்கள் வீட்டிற்கு வரும் வரதன் என்பவர் என் மாமியாருக்கு போன் செய்து தான் குடியிருந்து வரும் செங்கல்பட்டு ரைட்டர் சபாபதி தெருவிலுள்ள வீட்டில் தான், பாலா, அஜீத், பழனி, செந்தில்பிரகாஷ், ரவிபிரகாஷ் ஆகியோர் வழக்கு சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்த பட்ரவாக்கம் சிவா மற்றும் அவருடன் வந்த 10க்கும் மேற்பட்டவர்கள் ரவிபிரகாஷை கத்தியால் வெட்டி கொலை செய்து விட்டு கருப்பு நிற பொலிரோ காரில் தப்பி சென்றுவிட்டதாகவும், உடனே புறப்பட்டு வரும்படி எனக்கு தகவல் கூறினார் என்றும், உடனே என் மாமியாரும் செங்கல்பட்டு ரைட்டர் சபாபதி தெருவிலுள்ள வரதன் வீட்டிற்கு போனபோது என் கணவர் ரவிபிரகாஷின் பிரேதத்தை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய்விட்டதாக கூறினார்கள் என்றும், நான் கர்ப்பமாக இருந்ததால் போகவில்லை என்றும், என் மாமியாரும், என் கணவரின் தம்பி செந்தில்பிரகாஷும் என் கணவர் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு சென்று பார்த்துவிட்டு வந்து கூறினார்கள் என்றும், பட்ரவாக்கம் சிவாவும், அவனுடன் வந்தவர்களும் தான் என் கணவர் ரவிபிரகாஷை முன்விரோத்த்தில் வெட்டி கொலை செய்துள்ளனர் என்றும், இது சம்பந்தமாக

என் கணவரின் தம்பி செந்தில்பிரகாஷ் புகார் கொடுத்தார் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை